**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், வலங்கைமான்.**

2025ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 19 ம் நாள் செவ்வாய்க்கிழமை

**அசல் வழக்கு எண். 22/2020**

வாதி தரப்பு சாட்சியாக PW. 1 ன் வாக்குமூலம் 1969ம் ஆண்டின் 44வது சட்ட ஏற்பாடின் படி திரு. P. ஜேசுபாலன், எம்.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், வலங்கைமான் அவர்களால் ஆணையிடப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சுப்ரமணியன் | Father Name | : | தங்கவேலு |
| Village | : | விடையல்கருப்பூர் | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | விவசாயம் |
| Religion | : | | Age | : | 63 |

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி-**

தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 36 குழி. தாவா சொத்து ஆரம்பத்தில் யாருக்கு சொந்தமானது என்றால் தங்கவேலு என்பவருக்கு சொந்தமானது. தங்கவேலு எனது தகப்பனார் என்றால் சரிதான். தங்கவேலுவின் தகப்பனாரின் பெயர் கிருஷ்ண படையாச்சி ஆவார். தாவா சொத்து கிருஷ்ண படையாச்சி என்பவருக்குதான் சொந்தம் எனது அப்பாவுக்கு சொந்தமில்லை என்றால் சரியல்ல. கிருஷ்ண படையாச்சிக்கு 1 பெண் மற்றும் மூன்று ஆண் பிள்ளைகள் மொத்தம் 4 பிள்ளைகள் ஆகும். எனது தகப்பனார் தங்கவேலு, அவருக்கு அடுத்தது ராஜம், மூன்றாவது நபர் தான் பிரதிவாதி சின்னபிள்ளை என்றால் சரிதான். தாவா சொத்து அனைத்தும் எங்களிடம் உள்ளது என்றும் மேற்படி இடத்தில் மேற்கு புறமாக 10 குழியில் பிரதிவாதி டீக்கடை வைத்து நடத்துவதற்காக எனது தகப்பனாரிடம் கேட்டார் என்றால் சரிதான். அந்த 10 குழி இடத்தில் தான் சின்னப்பிள்ளை டீக்கடை வைத்து நடத்தி வருகிறார் மீதி இடம் எல்லாம் என்னிடம் உள்ளது என்றால் இல்லை மொத்த இடமும் என்னிடம்தான் உள்ளது. வழக்குமூலத்

தேதியான 30.10.2020ல் எனது அனுபவத்தில் உள்ள கிழ்புறத்தில் பிரதிவாதி அத்துமீறி பிரவேசித்து தன்னுடைய கீற்று கொட்டகையை விஸ்தரித்து கட்டுவதற்காக முயற்சி செய்துள்ளார் என்று எனது வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 30.10.2020ல் எனது அனுபவத்தில் உள்ள கிழ்புறத்தில் பிரதிவாதி அத்துமீறி பிரவேசித்து தன்னுடைய கீற்று கொட்டகையை விஸ்தரித்து கட்டுவதற்காக முயற்சி செய்தார் என்று எனது வழக்குரையில் கூறியுள்ள செய்தி வழக்கிற்காக கற்பனையாக கூறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்குரையில் பிரதிவாதியின் செயலை நண்பர்கள் உதவியுடன் தடுத்துவிட்டதாக கூறியுள்ளது என்றால் சரியல்ல எனது தம்பிகள் 4, 5 பேர்கள் சென்று தடுத்துவிட்டோம். இவ்வழக்கு தாக்கல் செய்யும் பொழுது நானும் என் தம்பிகளும் சென்று தடுத்தோம் என்று ஏன் கூறவில்லை என்றால் உறவினர்களை வழக்கில் சேர்க்க வேண்டாம் என்பதற்காக கூறவில்லை. எந்த நண்பர்களும் பிரதிவாதி அத்துமீறி பிரவேசித்தபோது தடுக்க வரவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் பிரதிவாதி கூறை வீட்டிலும் பிரதிவாதியின் மூத்த மகன் மாடி வீட்டிலும் இரண்டாவது மகன் ஆஸ்பெஸ்டாஸ் கூறை போட்ட வீட்டிலும் பல வருடங்களாக குடியிருந்து வருகிறார்கள் என்றால் இல்லை. தாவா சொத்தில் எனக்கு எந்த அனுபவமும் இல்லை என்றால் நான் நேற்றைக்கு முதல் நாள் தான் 2 பூவரச மரமும் 1 தென்னை மரத்தையும் வெட்டினேன். மரத்தை வெட்டி வீடுகட்ட பயன்படுத்த வைத்துள்ளேன். முந்தாநாள் மரத்தை வெட்டிய நபர்களை சாட்சியங்களாக விசாரிக்க முடியுமா என்றால் முடியும். வழக்கு சொத்துக்கும் எனக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதியின் தகப்பனார் கிருஷ்ண படையாச்சி என்பவர் தாவா சொத்தினை தனது இளைய மகனான பிரதிவாதிக்கு 25.11.1973 ம் தேதியில் உயில் எழுதி வைத்துவிட்டார் அதன் பிறகு அவர் 28.12.1973 ம் தேதியில் இயற்கை எய்திவிட்டார் அதனால் தாவா சொத்து முழுவதும் பிரதிவாதிக்குதான் சொந்தம் என்றாலும் எனக்கோ எனது அண்ணன் தம்பிகளுக்கோ தாவா சொத்தில் எவ்வித உரிமையும் பாத்தியதையும் கிடையாது என்றால் சரியல்ல. நானும் எனது குடும்பத்தாரும் கீழ விடையல் கருப்பூர் கதவு எண் 40 என்ற முகவரியில் தான்

குடியிருக்கிறோம் என்றாலும் தாவா சொத்தில் நாங்கள் குடியிருக்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கில் எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN
Digitally signed by JESU BALAN
Date: 2025.08.19 18:57:17 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
வலங்கைமான்.